Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**OS.No. 47/2021**

**Deposition of DW.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகேசன் | ஜாதி | : | |
| த/பெ | : | வெள்ளைச்சாமி | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | ஆத்தூர் | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | 90/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.11.2025.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி அங்கையற்கண்ணி உங்கள் உடன் பிறந்த தம்பியின் மகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சுந்தரபாண்டியன் உங்கள் தம்பியின் மகன் என்றால் சரிதான். உங்கள் அம்மா பெயர் காளியம்மாள் என்றால் சரிதான். இவ்வழக்கு பற்றிய பிராது ஆவணங்கள் நீங்கள் படித்து தெரிந்துகொண்டீர்களா என்றால் ஓரளவுக்கு படித்திருக்கிறேன். இந்த வழக்கில் தாக்கல் செய்துளள எதிர் வழக்குரைக்கு நீங்கள் தான் விபரம் சொன்னீர்கள் என்றால் சரிதான். உங்கள் தந்தை வெள்ளைசாமி நாடாவி எப்பொழுது எந்த தேதியில் இறந்தார் என்றால் நீங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் யாரும் கேக்கவில்லை நான் சொல்லவில்லை. எந்த தேதியில் இறந்தார் என்றால் 30 வருடத்திற்கு முன்பு யாரிடமும் தகவல் சொல்லாமல் எங்கோ சென்றுவிட்டார். வழக்கு சொத்து அனைத்தும் உங்கள் தகப்பனார் கிரையம் வாங்கயி சொத்து என்றால் சரிதான். என் தகப்பனார் சுய சம்பாதியத்தில் வாங்கப்பட்டது. உங்கள் தந்தை வாங்கிய கிரைய பத்திரத்தை 2 மற்றும் 3 வது ஆவணமாக வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை உங்கள் தகப்பனாருக்கு பிறகு உங்களுக்கும் உங்கள் தம்பிக்கும் கிடைக்கபெற்றது என்றால் சரியல்ல என் தந்தை கிடைக்கவில்லை என்பதால் அந்த சொத்துக்களை நான்தான் விவசாயம் செய்து வந்தேன். நீங்கள் தான் விவசாயம் செய்து வந்தீர்கள் என்று சொல்லும் சங்கதியை உங்களுடைய எதிர் வழக்குரையிலேயோ அல்லது இதற்கு முனபு நடந்த 2 வழக்குகளிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எந்த வருடத்திலிருந்து நீங்கள் விவசாயம் செய்து வருகிறிர்கள் என்று குறிப்பிட்டு தேதி எதையும் இந்த வழக்கிலோ முந்தைய வழக்குகளிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அந்த சங்கதியை குறிப்பிட்டு கேட்கவில்லை என்பதால் நான் சொல்லவில்லை. நீங்கள் விவசாயம் செய்து வருவதாக சொல்வதற்கு எந்த ஒரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விவசாயம் செய்து வந்ததற்கான ஆவணங்கள் தற்பொழுது உள்ளதா என்றால் 50,60 வருடங்களுக்கு முன்பு உள்ளது. தற்பொழுது அந்த ஆவணங்கள் இருப்பதற்கு வாய்ப்பில்லை. எல்லா சொத்துக்களை பொருத்தும் உங்கள் தம்பி கார்த்திகைநாதன் என்பவர் உங்கள் மீதும் உங்கள் தாயார் காளியம்மாள் மீதும் அசல்வழக்கு எண்.150/1988என்ற வழக்கை 1/3 பாகம் கோரி மாண்புமிகு திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால்

சரிதான். ஓட்டு வீடு மற்றும் அதை சுற்றியுள்ள காலி இடத்தை பொருத்து உங்கள் தம்பி கார்த்திகைநாதன் அசல்வழக்கு எண்.447/2007 என்ற வழக்கை மாண்புமிகு கூடுதல் உரிமையியல் மாவட்ட நீதிமன்றம் திண்டுக்கல்லில் உங்களுக்கு எதிராக தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டு வழக்குகளிலும் நீங்கள் விவசாயம் செய்து வருவதாக சொல்லும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண். 150/1988என்ற மேற்சொன்ன வழக்கில் நீங்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் உங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக வழக்கு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அதனைத் தொடர்ந்து அசல்வழக்கு எண்.150/1988வழக்கில் இறுதிநிலை தீர்ப்பாணை மனு செய்து அதனடிப்படையில் நீதிமன்ற ஆணையர் சொத்துகளை வந்து பார்வையிட்டார் என்றால் சரிதான்.நீதிமன்ற ஆணையர் சொத்துக்களை பார்வையிட வந்ததற்கு பிறகு தான் அந்த வழக்கில் உங்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தீர்கள் என்றால் சரிதான். நீங்கள் ரத்து செய்வதற்காக மனு செய்து நிலுவையில் இருக்கும்போதே அந்த வழக்கில் உங்களுக்கும் உங்கள் தாயார் காளியம்மாளுக்கும், உங்கள் தம்பி கார்த்திகைநாதனுக்கும் இடையே சமரசம் ஏற்பட்டு எழுத்து மூலமாக குறிப்பாணை ஒன்று எழுதிக்கொண்டீர்கள் என்றால் சரிதான்.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor